பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**27 05 2026** **12 40**

புதன்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்து வரும் வெப்ப அலையை எதிர்கொள்ள மக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இந்தியாவில் வர்த்தகம் செய்ய உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் சட்டப்பூர்வமாக சரியானதே என்று உச்சநீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

4. எபோலா வைரஸ் தொற்றுக்கு புதிய தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் எலிமினேட்டர் போட்டியில் ராஜஸ்தான் அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்து வரும் வெப்ப அலையை எதிர்கொள்ள மக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், உடலில் ஏற்படும் நீர்சத்து குறைவைப் போக்க தராளமாக தண்ணீர் குடிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

வயதான பெற்றோர், முதியோர்களை வெப்ப அலையில் இருந்து பாதுகாக்க சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெப்ப அலை மிக அதிகமாக இருக்கும் நேரத்தில் மக்கள் வெளியில் யாரும் செல்ல வேண்டாம் என்று கூறியுள்ளார்.

வீடுகளிலும், பொது இடங்களிலும் பறவைகளுக்காக சிறு பாத்திரங்களில் தண்ணீர் வைக்க கோரிக்கை விடுத்தார்.

<<<<>>>>

இந்தியாவில் வர்த்தகம் செய்ய உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்தியா-கனடா முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட பின் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், உள்கட்டமைப்பு, நிதித்துறை, மறுசீரமைப்பு மூலம் முதலீட்டாளர்கள் ஈர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பசுமை எரிசக்தி, தொழில்நுட்பம், டிஜிட்டல் கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு, உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முதலீடு செய்ய சர்வதேச நிறுவனங்களை வரவேற்றுள்ளார்.

இந்தியா - கனடா இடையே நிலையான வளர்ச்சி, பொருளாதார மேம்பாட்டுக்காக நிதித்துறை நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு. பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் சட்டப்பூர்வமாக சரியானதே என்று உச்சநீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி **Joymalya Bagchi** அடங்கிய அமர்வு இந்த உத்தரவை வெளியிட்டது.

பிஹாரில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதனை விசாரித்த உச்சநீதிமன்றம் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு முழு அதிகாரம் உள்ளதாக தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தகுதியான அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதற்காகவே வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணியை மேற்கொள்வதாக தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அடுத்த மாதம் 30ஆம் தேதி முதல் வீடு வீடாக சென்று சரிபார்க்கும் பணியை தொடங்க உள்ளதாக தெரிவித்தார்.

வரைவு வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி வெளியிடப்படும் என்று கூறிய அவர், இறுதி வாக்காளர் பட்டியல் அக்டோபர் மாதம் 7ஆம் தேதி வெளியிடப்படும் என்று கூறினார்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர், வாக்காளர் பெயர் சேர்ப்பதற்கான படிவங்களை வழங்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தில்லியில் உள்ள அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் இந்த வாக்காளர் தீவிர திருத்தப் பணியை நடத்த தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

**CBSE** விடைத்தாள் திருத்தப் பணிகளில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்று மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

சமூக வலைதளத்தில் வெளியான இந்த விடைத்தாள் திருத்துவதற்கான இணையதள முகவரி, சோதனைக்காக தொடங்கப்பட்ட இணையதள முகவரி மட்டுமே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மைக்கும், நேர்மையான முறையில் விடைத்தாள் திருத்தம் செய்யும் பணியை மேற்கொள்ளவே இந்த இணையதள சேவை தொடங்கப்பட உள்ளதாகவும் **CBSE** தெரிவித்துள்ளது.

<<<<>>>>

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே உள்ளிட்ட தலைவர்கள் பலர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

<<<<>>>>

நீட் நுழைவுத் தேர்வு வினாத்தாள் வெளியானது தொடர்பான வழக்கில் லத்தூர், புனே-யை சேர்ந்த மேலும் 2 பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

இந்த வழக்கில் தில்லி, ஜெய்ப்பூர், நாசிக், லாத்தூர், புனே உள்ளிட்ட பல்வேறு நகரங்களைச் சேர்ந்த 13 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள லாத்தூரை சேர்ந்த மருத்துவர் மனோஜ் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

3 மாணவர்களுக்கு வேதியியல் பாட வினாத்தாளை முன்கூட்டியே வழங்கியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

புனேயை சேர்ந்த பயிற்சி மைய ஆசிரியர் தேஜஸ் என்பவரும் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக சிபிஐ 49 இடங்களில் சோதனை மேற்கொண்டது.

கடந்த 3ஆம் தேதி நடைபெற்ற நீட் நுழைவுத் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதை அடுத்து அந்த தேர்வு ரத்து செய்யப்பட்டது.

<<<<>>>>

எபோலா வைரஸ் தொற்றுக்கு புதிய தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதற்கான அறிவிப்பை ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சர் Mikhail Murashko வெளியிட்டுள்ளதாக தென்னாப்பிரிக்காவுக்கான ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

காங்கோ நாட்டில் பரவும் வைரஸ் தொற்று பரவுவதை தடுக்கவும் இது பயனுள்ளதாக அமையும் என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

காங்கோ மற்றும் உகாண்டா நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸ் தொற்று உலகளாவிய பொது சுகாதார அவசர காலம் என்று உலக சுகாதார அமைப்பு கடந்த 17ஆம் தேதி அறிவித்திருந்தது.

இந்நாடுகளில் இருந்து வரும் பயணிகளை நோய் அறிகுறி சோதனை செய்ய வேண்டும் என்றும் உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

இந்தியாவில் எபோலா வைரஸ் தொற்று அறிகுறி யாருக்கும் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் எபோலா தொற்று ஆப்பிரிக்காவின் பல்வேறு இடங்களில் பரவுவதையடுத்து இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருவதாக கூறியுள்ளது.

உகாண்டாவில் இருந்து பெங்களூரு வந்த ஒருவருக்கு அறிகுறிகள் இருந்ததையடுத்து, அவரது ரத்த மாதிரி பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் அந்த நபருக்கு எபோலா தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டது.

உலக சுகாதார அமைப்பின் நெறிமுறைகளின் அடிப்படையில் கண்காணித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என்றும், தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமரின் முத்ரா யோஜ்னா திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குபவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை மத்திய அரசு கடன் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் கடன் பெற்றது தமக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Beneficiary — 25 Sec)**

<<<<>>>>

ஹமாஸ் அமைப்பின் புதிய தலைவராக செயல்பட்டு வந்த **Mohammed Odeh,** இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் Israel Katz-ன் உத்தரவிற்கேற்ப தாக்குதல் நடத்தியதாக கூறியுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி பொதுமக்களை கடத்தி சென்றதாக Mohammed Odeh மீது குற்றச்சாட்டு இருந்தது.

இஸ்ரேல் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் Ezzedine கொல்லப்பட்டதையடுத்து, Mohammed Odeh புதிய தலைவராக அந்தப் பொறுப்பில் இருந்தார்.

<<<<>>>>

தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வெளி தாக்குதலில் 36 பேர் உயிரிழந்தனர்.

லெபனான் சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் இஸ்ரேலின் நகரங்கள் மற்றும் கிராமப்புற பகுதிகளில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது.

தெற்கு லெபானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் கட்டமைப்புகளை அழிக்க தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் அறிவித்திருந்தது.

இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தி வருகிறது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் எலிமினேட்டர் போட்டியில் இன்று ராஜஸ்தான் அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

நியூசண்டிகரில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி நாளை மறுநாள் நடைபெறும் இரண்டாவது **Qualifier** போட்டியில் குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

---------------

ஃபிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 7-5, 6-2 என்ற செட் கணக்கில் அர்ஜென்டினாவின் **Francisco - Mariano** இணையை வென்றது.

**<<<<The End>>>>**